**சார்பு நீதிமன்றம், நாகப்பட்டினம்.**

முன்னிலை - திருமதி. S. இந்திராகாந்தி, எம். எல்.,

சார்பு நீதிபதி, நாகப்பட்டினம்.

திருவள்ளுவராண்டு 2057 பராபவ வருடம் ஆனித்திங்கள் 18-ம் நாள்

2026 ம் ஆண்டு ஜூலை மாதம்02-ம் நாள் வியாழக்கிழமை

CNR.NO: TNNG03-000204-2026

**இந்து திருமண அசல் மனு எண்.54/2026**

1. சித்திரலேகா
2. குணசேகரன் ......................மனுதாரர்கள்

..எதிர்..

இல்லை .................எதிர்மனுதாரர்

இம்மனுவானது இந்நீதிமன்றத்தின் முன்பாக 22.06.2026 அன்று விசாரணைக்கு வந்து, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.முகம்மது மன்சூர் அவர்கள் ஆஜராகியும், மனுதாரர்கள் தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்................

**ஆணையுரை**

மனுதாரர்களுக்கிடையே கடந்த 19.07.2009 ம் தேதி வேட்டைகாரனிருப்பு கிராமத்தில் உள்ள அருள்மிகு மகா மாரியம்மன் ஆலயத்தில் இந்து சாஸ்திர முறைப்படி நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து பரிகாரம் வழங்கக் கோரியும், இதர பரிகாரங்கள் வழங்கி உத்தரவிடக் கோரியும் இந்து திருமண சட்டம் பிரிவு 13(B)-ன்படி இம்மனு மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.07.02 14:18:15 +0530

I. **மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்**

மனுதாரர்கள் இருவருக்கும் கடந்த 19.07.2009 அன்று வேட்டைகாரனிருப்பு கிராமத்தில் உள்ள அருள்மிகு மகா மாரியம்மன் ஆலயத்தில் இந்து சாஸ்திர முறைப்படி திருமணம் நடைபெற்றது என்றும், திருமணத்திற்கு பிறகு மனுதாரர்கள் இருவரும் 2ம் மனுதாரர் வீட்டில் திருமண வாழ்க்கையை தொடங்கினர் என்றும், திருமணத்தின் பயனாக கடந்த 08.04.2010 அன்று ஜீவஸ்ரீ 01.0.2015 அன்று கவிஸ்ரீ ஆகிய இரண்டு பெண் குழந்தைகள் பிறந்துள்ளார்கள் என்றும், அந்த குழந்தைகள் 1ம் மனுதாரருடன் வசித்து வருகிறார்கள் என்றும், திருமண வாழ்க்கையின் ஆரம்பகாலம் முதலே மனுதாரர்களுக்கிடையே கருத்துவேறுபாடுகள் நிலவி வந்து, அடிக்கடி பிரச்சினைகள் எழுவதும், அதனை ஊர் முக்கியஸ்தர்கள், உறவினர்கள், பஞ்சாயத்தார்கள் தீர்த்து வைப்பது என இருந்து வந்தது என்றும், குழந்தை பிறந்து முதல் குழந்தை Major ஆகும் நிலை வந்த பிறகும் இருவருக்கும் உள்ள கருத்து வேறுபாடுகள் தீரவில்லை என்றும், அதனால் மனுதாரர்கள் அவரவர் வழியினை அவரவர் வழியில் பார்த்துக்கொள்ள தீர்மானித்து பரஸ்பர விவாகரத்து முடிவினை எடுத்துள்ளனர் என்றும், இது முழுக்க முழுக்க No fault basis அடிப்படையில் எடுக்கப்பட்ட mutual consent முடிவு என்றும், 1ம் மனுதாரர் குழந்தைகளுக்காக 2ம் மனுதாரரிடமிருந்து எவ்வித ஜீவனாம்சமும் கோரமாட்டேன் என்றும், 2ம் மனுதாரரும் மேற்படி இளவல் குழந்தைகளின் custody கோரியோ, இன்னபிற உரிமைகள் கோரியோ வழக்கு தொடுக்கமாட்டேன் என்றும் உறுதியளிக்கிறார்கள் என்றும், மனுதாரர்கள் ஒருவருக்கொருவர்

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.07.02 14:18:21 +0530

அசையும், அசையா சொத்துக்களில் யாதொரு பாத்தியதை உரிமை கோருவதில்லை என்று உறுதியளிக்கிறார்கள் என்றும், மனுதாரர்கள் கடந்த 2022ம் ஆண்டு மார்ச் மாதம் முதல் சுமார் 3 வருடங்களுக்கு மேலாக பிரிந்து தனித்தனியே வாழ்ந்து வருகிறார்கள் என்றும், எனவே, கடந்த 19.07.2009 தேதியன்று நடைபெற்ற திருமணத்தை பரஸ்பர விவாகரத்து பெற்றுக்கொள்ள முடிவு செய்து, மனுதாரர்கள் இருவரும் இந்த விவாகரத்து மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

II. **இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை**

1. மனுதாரர்கள் மனுவில் கோரியுள்ள பரிகாரம் மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கதா என்பதேயாகும்?
2. மனுதாரர்கள் தரப்பில் 1ம் மனுதாரர் ம.சா.1 ஆகவும், 2ம் மனுதாரர் ம.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.9 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

III. **பிரச்சனைக்கான தீர்வு**

1) மனுதாரர்கள் தரப்பில் 1, 2 மனுதாரர்களுக்கிடையே கடந்த 19.07.2009-ல் நடைபெற்ற திருமண பந்தத்தை உரிய நீதிமன்றம் மூலமாக ஒத்திசைவு மணமுறிவு கோரி இம்மனுவை தாக்கல் செய்தபிறகு, இந்த மனு 15.04.2026 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 27.04.2026 அன்று வாய்தா வைக்கப்பட்டு, 22.06.2026ம் தேதியில் இந்நீதிமன்றத்தில் 1ம் மனுதாரரும், 2ம் மனுதாரரும், ஆஜராகி, முதல் மனுதாரருக்கும், 2ம் மனுதாரருக்கும் கடந்த 19.07.2009-ல் நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து, விவாகரத்து பரிகாரம் வழங்க வேண்டுமென்றும், தங்களுடைய

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.07.02 14:18:28 +0530

முடிவில் எவ்வித மாற்றமும் இல்லையென்று குறிப்பிட்டுள்ளார்கள்.

2) மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவை நிரூபிக்கும் விதமாக 1ம் மனுதாரர் ம.சா.1 ஆகவும், 2ம் மனுதாரர் ம.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் நீதிமன்றத்தில் அளித்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்தில் தங்கள் மனுவில் உள்ளவாறு குறிப்பிட்டு சாட்சியமளித்துள்ளார்கள். 1 மற்றும் 2 மனுதாரர்கள் நீதிமன்றத்தில் அளித்துள்ள சாட்சியத்தில் தங்கள் இருவருக்கும் கடந்த 19.07.2009 அன்று வேட்டைகாரனிருப்பு கிராமத்தில் உள்ள அருள்மிகு மகா மாரியம்மன் ஆலயத்தில் இந்து சாஸ்திர முறைப்படி திருமணம் நடைபெற்றது என்றும், திருமணத்தின் பயனாக தங்களுக்கு 2 பெண் குழந்தைகள் உள்ளார்கள் என்றும், திருமணமான நாளிலிருந்து தங்களுக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு இருவரும் பிரிந்து வாழ்ந்து வருகிறோம் என்றும், சேர்ந்து வாழ சமரசம் பேசியும் இருவரும் சேர்ந்து வாழ முடியவில்லை என்றும், அதனால் தங்களுக்கிடையே நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்வதென முடிவு செய்து, கடந்த 19.07.2009 தேதியன்று நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து பரஸ்பர விவாகரத்து பரிகாரம் கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளோம் என்றும், மனுவை அனுமதிக்க தாழ்மையுடன் பிரார்த்திக்கிறோம் என்றும் குறிப்பிட்டு முதல் மனுதாரரும், 2ம் மனுதாரரும் சாட்சியம் அளித்துள்ளார்கள்.

3) 1, 2 மனுதாரர்களின் சாட்சியங்களை பரிசீலனை செய்து பார்க்கும் போது, திருமணமான சில வருடங்களுக்கு பிறகு மனுதாரர்களுக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டு, மனுதாரர்கள்

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.07.02 14:18:34 +0530

இருவரும் அவரவர் பெற்றோர்கள் வீட்டில் வாழ்ந்து வருகிறார்கள் என்பது தெரியவருகிறது. மனுதாரர்கள் இருவருமே நீதிமன்றத்தில் அளித்துள்ள சாட்சியத்தில், திருமணத்தின் பலனாக 2 பெண் குழந்தைகள் உள்ளார்கள் என்றும், 1ம் மனுதாரர் குழந்தைகளுக்காக 2ம் மனுதாரரிடமிருந்து எவ்வித ஜீவனாம்சமும் கோரமாட்டேன் என்றும், 2ம் மனுதாரரும் மேற்படி இளவல் குழந்தைகளின் custody கோரியோ, இன்னபிற உரிமைகள் கோரியோ வழக்கு தொடுக்கமாட்டேன் என்றும், மனுதாரர்கள் ஒருவருக்கொருவர் அசையும், அசையா சொத்துக்களில் யாதொரு பாத்தியதை உரிமை கோருவதில்லை என்று உறுதியளித்துள்ளார்கள் என்றும் மனு மற்றும் மனுதாரர்களின் சாட்சியங்கள் வாயிலாக தெளிவாக தெரியவருகிறது.

4) ஆகவே, மனுதாரர்கள் இருவரும் தனித்தனியாக பிரிந்து வாழ்ந்து வரும் நிலையில் அவர்கள் இருவரையும், சேர்ந்து வாழ வேண்டுமென்று இந்நீதிமன்றம் உத்தரவிடும்பட்சத்தில், அது இருவருடைய வாழ்க்கையிலும் நிம்மதியை ஏற்படுத்தாது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, 1, 2 மனுதாரர்களுக்கு இடையே கடந்த 19.07.2009ம் தேதியில் நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து, விவாகரத்து வழங்குவது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று கருதி, மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவை அனுமதித்து, 1ம் மனுதாரருக்கும், 2ம் மனுதாரருக்கும் கடந்த 19.07.2009-ல் நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து பரிகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.07.02 14:18:40 +0530

**IV. முடிவாக,**

1. **மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு செலவுத் தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.**
2. **1ம் மனுதாரருக்கும், 2ம் மனுதாரருக்கும் கடந்த 19.07.2009ல் நடைபெற்ற திருமணத்தை பரஸ்பர சம்மதத்தின் பேரில் (Mutual Consent) ரத்து செய்து விவாகரத்து பரிகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது.**

இந்த ஆணையுரையானது என்னால் சுருக்கெழுத்து - தட்டச்சரிடம் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் பதிவெடுத்து பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026ம் வருடம் ஜூலை மாதம் 02ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI Date: 2026.07.02 14:18:47 +0530

சார்பு நீதிபதி,

நாகப்பட்டினம்.

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்</u>**

| | |
|---|---|
| ம.சா.1 | திருமதி. சித்திரலேகா (1ம்மனுதாரர்) |
| ம.சா.2 | திரு. குணசேகரன் (2ம் மனுதாரர்) |

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 19.07.2009 | திருமண அழைப்பிதழ் | (அசல்) |
| ம.சா.ஆ.2 | 10.08.2009 | திருமணம் நடைபெற்ற கோவிலில் வழங்கப்பட்ட சான்று | (அசல்) |

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.3 | -- | திருமண புகைப்படம் | (அசல்) |
| ம.சா.ஆ.4 | 08.04.2010 | இளவர் குழந்தை ஜீவஸ்ரீயின் பிறப்பு சான்றிதழ் | (நகல்) |
| ம.சா.ஆ.5 | -- | இளவர் குழந்தை ஜீவஸ்ரீ-ன் ஆதார் கார்டு | (நகல்) |
| ம.சா.ஆ.6 | 17.08.2025 | இளவர் குழந்தை கவிஸ்ரீயின் பிறப்பு சான்றிதழ் | (நகல்) |
| ம.சா.ஆ.7 | -- | இளவர் குழந்தை கவிஸ்ரீ-ன் ஆதார் கார்டு | (நகல்) |
| ம.சா.ஆ.8 | -- | 1ம் மனுதாரரின் ஆதார் அட்டை | (நகல்) |
| ம.சா.ஆ.9 | -- | 2 ம் மனுதாரரின் ஆதார் அட்டை | (நகல்) |

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி</u>** : இல்லை.

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>** : இல்லை.

S INDRA GANDHI
Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.07.02 14:18:54 +0530

சார்பு நீதிபதி,

நாகப்பட்டினம்.

Draft / Fair **உத்தரவு**

**சார்பு நீதிமன்றம், நாகப்பட்டினம்**

**H.M.O.P.No.54/2026**

நாள் : 22.06.2026